முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

முன்னிலை: **திருமதி.K.அறிவொளி, M.A., M.L.,**

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

2026-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 07-ம் நாள் வெள்ளிக் கிழமை

**அசல் வழக்கு எண்.112/2025**

*(CNR.No.TNSV01002096-2025)*

* * * * *

பெ.ஜெயக்குமார் . . . வாதி

/ எதிர் /

சு.இந்திராகாந்தி

. . . பிரதிவாதி

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பு 04.08.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.இராஜா அமுதன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை unclaimed என்று திரும்பி வந்துவிட்ட நிலையில் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டும், 28.01.2026-ம் தேதியன்று மேற்படி பிரதிவாதியை அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரையை கேட்டும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று நீதிமன்றம் வழங்கும் . . .

**தீ ர் ப் பு ரை**

வாதிக்கு, பிரதிவாதி வழக்கு தொகையான ரூ.26,75,200/-ஐ செலுத்த கோரியும், அசல் தொகை ரூ.16,00,000/-க்கு வழக்கு தேதி முதல் தீர்ப்பு தேதி வரை வருடத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100-க்கு ரூ.2 வட்டி சகிதம் செலுத்த கோரியும் மற்றும் வழக்கின் செலவு தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

**2) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:-**

**i)** வாதியும், பிரதிவாதியும் தூரத்து உறவினர்கள் என்றும், வாதி பிரதிவாதிகள் இருவரும் உறவினர்கள் என்ற முறையில் பல வருட பழக்கத்தின் அடிப்படையில் பிரதிவாதியும் வாதியை அணுகி தனது அவசர நிமித்தமாகவும், பிரதிவாதி வெளியில் வாங்கியுள்ள கடனை அடைப்பதற்காகவும் ரூ.16,00,000/- (பதினாறு லட்சம் ரூபாய்) கடனாக வேண்டும் என்று வாதியிடம் கேட்டுள்ளார் என்றும், அதற்கு சம்மதம் தெரிவித்த வாதியும் தனது நகைக்கடை மற்றும் மருந்துக்கடை ஆகியவற்றின் வளர்ச்சிக்காக கைவசம் வைத்திருந்த தொகையிலிருந்து எடுத்து பிரதிவாதிக்கு கடந்த 21.08.2022-ம் தேதியன்று வாதியின் வீட்டில் வைத்து, கடனாக மேற்படி ரூ.16,00,000/- (பதினாறு லட்சம் ரூபாய்)-த்தை ரொக்கமாக கொடுத்துள்ளார்.

**ii)** மேற்படி ரூ.16,00,000/-(பதினாறு லட்சம் ரூபாய்) கடனுக்கு ஆதரவாக மேற்படி தேதியிலேயே பிரதிவாதி, வாதிக்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், மேலும் அசல் தொகை ரூ.16,00,000/-(பதினாறு லட்சம் ரூபாய்)-க்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100-க்கு ரூ.2 சதவீத வட்டி வீதம் வட்டி சேர்த்து, வட்டியும் மற்றும் அசலும் வாதி வேண்டும்போது செலுத்துவதாக ஒப்புக்கொண்டே தகுந்த சாட்சிகள் முன்னிலையில் பிராமிசரி நோட்டினை எழுதிக்கொடுத்துள்ளார்.

**iii)** பிரதிவாதி மேற்படி பிராமிசரி நோட்டின்படி அசலுக்கோ, வட்டிக்கோ நாளது தேதிவரை வாதியிடம் யாதொரு தொகையும் செலுத்தவில்லை என்றும், வாதியும் பிரதிவாதியிடம் மேற்படி அசல் மற்றும் வட்டி தொகையை நேரிலும், சில

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.08.07 18:04:45 +05'30'

முக்கியஸ்தர்கள் மூலமாகவும் கேட்டதில், பிரதிவாதியும் விரைவில் தருவதாகவே கூறி வீண் காலதாமதம் செய்து வந்தார் என்றும், அதனால் வாதி தனது வழக்கறிஞர் மூலம் மேற்படி தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்தும்படி கடந்த 14.03.2025-ம் தேதியன்று பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், மேற்படி சட்ட அறிவிப்பை பெற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்பிய பிரதிவாதியும் மேற்படி தொகையினை திருப்பி செலுத்தாமலும் வீண் காலம் தாழ்த்தி வருகின்றார்.

iv) பிரதிவாதி வாதிக்கு தாவா அசல் வட்டி தொகைகளை திரும்ப செலுத்த எண்ணம் இல்லாமல் வாதியை மோசம் செய்ய வேண்டும் என்ற நிலையில் உள்ளதால் வாதியும் தாவா அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

**3)** பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை unclaimed என்று திரும்பி வந்துவிட்ட நிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 5, விதி 20-ன் கீழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டும், 28.01.2026-ம் தேதியன்று மேற்படி பிரதிவாதியை அழைத்தும் ஆஜராகாமல் இருந்த நிலையில், அவர் தோன்றா தரப்பினராக கருதப்பட்டு, வழக்கை ஒருதலைபட்சமாக்க தீர்மானிக்க இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டது.

**4)** இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் பிராதில் கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**5)** வாதி தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில், வாதி பெ.ஜெயக்குமார் வா.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதி தரப்பு 2-வது சாட்சியாக

ரா.வேலாயுதம் வா.சா.2-ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. அத்துடன் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**6)** வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வாதியின் வழக்கை நிரூபிக்கும் வகையில் வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 21.08.2022-ம் தேதியிட்ட பிராமிசரி நோட்டு அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 14.03.2025-ம் தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பு ரசீது அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 20.03.2025-ம் தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பை பெற்றுக் கொள்ளாமல் பிரதிவாதி திருப்பி அனுப்பிய பதிவு தபால் அசல் வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7)** இந்நிலையில் வாதியிடம், பிரதிவாதி அவசர நிமித்தமாகவும், பிரதிவாதி வெளியில் வாங்கியுள்ள கடனை அடைப்பதற்காகவும் ரூ.16,00,000/- கேட்டதன் அடிப்படையில், பிரதிவாதி, வாதியிடமிருந்து ரூ.16,00,000/-த்தை கடனாகப் பெற்றுள்ளார் என்பதும், மேற்படி கடனுக்கு ஆதரவாக வாதிக்கு, பிரதிவாதி தகுந்த சாட்சிகள் முன்னிலையில் வா.சா.ஆ.1 புரோநோட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும், மேற்படி வாதி தரப்பு 2-வது சாட்சி ரா.வேலாயுதம் (வா.சா.2) என்றும், இந்த வழக்கு சங்கதிகள் அனைத்தும் தனக்கு

தெரியும் என்றும், தனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும் சாட்சியமளித்துள்ளதால் வா.சா.ஆ.1 பிராமிசரி நோட்டில் வா.சா.2 சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. மேற்படி வாதி, பிரதிவாதிக்கு தனது வழக்குரைஞர் மூலம் வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதும், வாதி பிரதிவாதிக்கு தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பை பெற்றுக் கொள்ளாமல் பிரதிவாதி திருப்பி அனுப்பிய பதிவு தபால் அசல் வா.சா.ஆ.3 என்பதும் அறிந்து கொள்ள முடிகிறது.

**8)** மேற்கண்ட வகையில் விவரித்தவாறு, வாதியிடம், பிரதிவாதி அவசர நிமித்தமாகவும், பிரதிவாதி வெளியில் வாங்கியுள்ள கடனை அடைப்பதற்காகவும் ரூ.16,00,000/- பெற்றிருப்பதையும், மேற்படி மொத்த தொகை ரூ.16,00,000/-க்கு வாதிக்கு, பிரதிவாதி வட்டிக்காக எந்த ஒரு தொகையும் இதுநாள்வரை செலுத்தி வைக்கவில்லை என்பதையும், அதனால் வாதி மேற்படி கடன் தொகையை செலுத்தக் கோரி பிரதிவாதியிடம் நேரிலும், ஆட்கள் மூலமாகவும் தொடர்ந்து கேட்டும் எந்த தொகையும் செலுத்தவில்லை என்பதால் மேற்படி வாதி, தனது வழக்குரைஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதையும் வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் வாதி நிரூபித்திருப்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், அதனை மறுத்துரைக்கும் வகையில் பிரதிவாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியங்களோ, சான்றாவாணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.08.07 18:05:03 +0530

எனவே, வாதிக்கு, பிரதிவாதி தாவா குறிப்பிடும் அசல் மற்றும் வட்டித் தொகையான ரூ.26,75,200/-யும் மற்றும் அசல் தொகையான ரூ.16,00,000/-க்கு தாவா வழக்குத் தாக்கல் செய்த தேதி முதல் தொகை செலுத்தும் நாள் வரை ஆண்டிற்கு 6% பின்வட்டி செலுத்த வேண்டுமென்றும் இந்த பிரச்சனைக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

***இறுதியாக,*** வாதியின் வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. வாதிக்கு, பிரதிவாதி ரூ.26,75,200/-யும், அசல் தொகையான ரூ.16,00,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் தொகை முழுவதும் செலுத்தும் நாள் வரை வருடத்திற்கு 6% பின்வட்டி வீதம் சேர்த்து செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 07-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.08.07 18:05:08 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

<u>**வாதி தரப்பு சாட்சிகள்:-**</u>

வா.சா.1 ___ பெ.ஜெயக்குமார்

வா.சா.2 ___ ரா.வேலாயுதம்

<u>**வாதி தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்:-**</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 21.08.2022 | பிராமிசரி நோட்டு. | அசல் |
| வா.சா.ஆ.2 | 14.03.2025 | வாதி, பிரதிவாதிக்கு தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பு ரசீது. | அலுவலக நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.3 | 20.03.2025 | வாதி பிரதிவாதிக்கு தனது அசல் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் பிரதிவாதி திருப்பி அனுப்பிய பதிவு தபால். |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.08.07 18:05:15 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.